

## வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும்,
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.
(சங்கீதம்119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)
(வியாழன்தோறும்)

| 05.01.2023 | 01. 'அதிர்ச்சியடையா' கிறிஸ்தவன்! |
|---|---|



தன் அனுதின ஜீவியத்தில், "தன்னுடைய கொஞ்சத்திலும் போதுமென்ற பொன்னான மனதுடையவனாய்" இயேசுவின் சீஷன் இருப்பான். இதுபோன்ற சீஷன், "சகலமும்" தன் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது! என்ற சத்தியத்தை ஆழமாய் விசுவாசிப்பான். மகிழ்ச்சியோ அல்லது துன்பமோ; நோய்வாய்பட்டிருப்பதோ அல்லது சுகித்திருப்பதோ; ஜீவனோ அல்லது மரணமோ.... ஆகிய எதுவாயிருந்தாலும் அவை யாவற்றிற்கும் அவன் தன் இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்லிக் கொண்டிருப்பான். தன்னை சந்திக்கும் எல்லாப் பாரங்களையும் கவலைகளையும் இவன் மிகுந்த கவனமாய் தேவனிடம் போட்டுவிடுவதால் 'அதிர்ச்சியால்' ஸ்தம்பிக்கச் செய்யும் எந்தப் பயத்தையும், பதட்டத்தையும் இவன் ருசிப்பதேயில்லை!

இந்த உத்தம சீஷன், தான் ஜெபிப்பதை நிறுத்தவேமாட்டான். இயற்கையான அவனது சொந்த சுபாவமாகவே ஜெபம் அவனுக்கு இருக்கும். ஆகையினால் அவன் எதற்குமே சோர்ந்து போவதில்லை. தாழ்மை உள்ளத்தோடு தேவனுடைய சமூகத்திற்குச் சென்று அடிக்கடி தன் முழங்காலில் நின்று ஜெபிப்பான்!

– ரத்னம்